13.12.2023

*OS 450/2019*
**பி.வா.சா.1 தமிழ்செல்வி**
**முதல் விசாரணை தொடர்ச்சி:-**

14.06.1989ம் தேதிய அம்மாபிள்ளை மற்றும் அவரது மகன்கள் எனக்கு 60 செண்டை பொறுத்து எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் பி.வா.சா.ஆ.1. 24.03.1988ம் தேதிய நான் செலுத்திய கிஸ்தி வரி ரசீது பி.வா.சா.ஆ.2. மேற்படி ரசீது குறித்து வாதி தரப்பில் கிரையம் பெற்ற தேதிக்கு முன்னர் வரி ரசீது செலுத்தியதாக ஆட்சேபனை எழுப்பப்பட்டது. ஆட்சேபனை தீர்ப்பின் போது விவாதிக்கப்படும், ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. 10.10.1990ம் தேதிய 2ம் பிரதிவாதிக்கு நான் மேற்படி 60 செண்டை கிரையம் செய்து கொடுத்த கிரைய பத்திரத்தின் அசல் பி.வா.சா.ஆ.3. 02.04.1992ம் தேதிய அம்மாபிள்ளை மற்றும் அவரது மகன்கள் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் பி.வா.சா.ஆ.4. 17.03.1993ம் தேதிய அம்மாபிள்ளை மற்றும் அவரது மகன்கள் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் பி.வா.சா.ஆ.5. 27.12.1995ம் தேதிய 2ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா பாஸ்புத்தகம் உண்மை நகல் பி.வா.சா.ஆ.6. 29.03.2010ம் தேதிய 2ம் பிரதிவாதி பெயரில் செலுத்தப்பட்ட கிஸ்தி ரசீது பி.வா.சா.ஆ.7. 22.01.2019ம் தேதிய 2ம் பிரதிவாதி பெயரில் உள்ள கணினி பட்டா எண்.33 பி.வா.சா.ஆ.8. 11.02.2019ம் தேதிய 2ம் பிரதிவாதி பெயரில் 10(1) கணினி சிட்டா பி.வா.சா.ஆ.9. 11.02.2019ம் தேதிய 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் அசல் பி.வா.சா.ஆ.10. 10.08.2019ம் தேதி 3ம் பிரதிவாதி பெயரில் 10(1) சிட்டா பி.வா.சா.ஆ.11. 10.08.2019ம் தேதிய அடங்கல் கணக்கு பி.வா.சா.ஆ.12. 10.08.2019ம் தேதிய 3ம் பிரதிவாதி சத்திரப்பட்டி காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனு உண்மை நகல் பி.வா.சா.ஆ.13. 12.09.2023ம் தேதிய அம்மாபிள்ளை பெயரில் பசலி 1397ற்கான அடங்கல் கணக்கு பி.வா.சா.ஆ.14. 12.09.2023ம் தேதிய 2ம் பிரதிவாதி பெயரில் பசலி 1407ற்கான அடங்கல் கணக்கு பி.வா.சா.ஆ.15. 12.09.2023ம் தேதிய 2ம் பிரதிவாதி பெயரில் பசலி 1428ற்கான அடங்கல் கணக்கு பி.வா.சா.ஆ.16. (மேற்படி பி.வா.சா.ஆ.4 முதல் 16 வரையிலான ஆவணங்கள் உரிய நபர்களால் தாக்கல் செய்யப்படவில்லை என்று ஆட்சேபனை எழுப்பப்பட்டது. மேலும், பி.வா.சா.ஆ.11 முதல் 16 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்கு பிந்தைய ஆவணங்கள் என ஆட்சேபனை எழுப்பப்பட்டது. ஆட்சேபனை தீர்ப்பின் போது விவாதிக்கப்படும், ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி 2ம் பிரதிவாதி உடலநிலை சரியில்லாமல் இருப்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிப்பதாக தெரிவித்துள்ளார்).

**குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒப்பம்-S.கணேசன்
சார்பு நீதிபதி
மேலூர்.